செ.வெ.எண்.342 நாள்.17.07.2017

## பத்திரிக்கைச் செய்தி

சமூகப் பணியாளர் மற்றும் களப்பணியாளர் பணிக்கான
விண்ணப்பம் வரவேற்பு

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு. பா. பொன்னையா இ.ஆ.ப அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு, இயங்கிவரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாகவுள்ள "சமூகப் பணியாளர்-1 (பெண்கள் மட்டும்), களப்பணியாளர்-1 (ஆண்/பெண்)" பணியிடங்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நிரப்பிடவுள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் தகுதியான நபர்களிடமிருந்து வரவேற்க்கப்படுகிறது.

இந்த பணியிடங்கள் முற்றிலும் தற்காலிக தொகுப்பு ஊதிய அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது. சமூகப் பணியாளர் பணியிடத்திற்கான கல்வி தகுதி ஏதேனும் ஒரு பாடப் பிரிவில் பட்டதாரி / இளநிலை பட்டதாரி (உளவியல்/ சமூகப்பணி/ சமூகவியல்/வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுபடுத்துதல் பட்டம் பெற்றிருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்). வயது வரம்பு 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். தொகுப்பு ஊதியம் ரூ. 14,000/- களப்பணியாளர் பணியிடத்திற்கான கல்வி தகுதி 10ஆம் / 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குழந்தை சார்ந்த பணியில் ஓராண்டு ஆண்டு பணிபுரிந்த அனுபவம் வேண்டும். வயது வரம்பு 40 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும். தொகுப்பு ஊதியம்: ரூ. 8,000/-.

மேற்கண்ட பணியிடங்களுக்கு வருகின்ற 05.08.2017தேதி மாலை 5.30 மணிக்குள் விண்ணப்பம் மற்றும் விளக்க குறிப்புகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி:

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, எண்: 317, காமாட்சி நிலையம்,
K.T.S.மணி தெரு, மாமல்லன் நகர், (மாமல்லன் மெட்ரிக் மே.நி. பள்ளி அருகில்)
காஞ்சிபுரம் - 631502. தொலைபேசி எண்: 044- 27234950.
மின்னஞ்சல்: kanchipuramdcps@gmail.com

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.